# நமது தின கனி
காலை நாளிதழ்
# NAMADHU DHINA KANI
Daily Morning

| Vol: 02 | Issue: 2 | 4 Pages | 29.7.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 2 | 4 பக்கங்கள் | 29.7.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஒலிம்பிக் போட்டி: நமது வீரர்களை உற்சாகப்படுத்த வேண்டும்: பிரதமர்



புதுடெல்லி, ஜூலை 29

பிரதமர் நரேந்திர மோடி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை மனதின் குரல் நிகழ்ச்சி (மன் கி பாத்) மூலம் நாட்டு மக்களிடம் உரையாற்றி வருகிறார். 112வது நிகழ்ச்சி இன்று ஒலிபரப்பானது. இதில் மோடி பேசியதாவது:

ஒலிம்பிக் போட்டியில் நமது தேசியக் கொடியை உலகளவிற்கு எடுத்து செல்லவும், நாட்டிற்கு பெருமைசேர்க்கவும்நமதுவீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அவர்களை நீங்கள் உற்சாகப்படுத்த வேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன்னர் 100 நாடுகளைசேர்ந்தவர்கள்கலந்துகொண்டசர்வதேசகணிதஒலிம்பியாட்டில் இந்திய அணி 5வது இடத்தை பிடித்து உள்ளது.

அசாமின் மொய்டாம்கள் உலக பாரம்பரிய சின்னமாக சேர்க்கப்பட்டு உள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் இருந்து யுனெஸ்கோ பட்டியலில் இடம்பெற்றுள்ள முதல் இடம் இதுவாகும். இந்த இடத்திற்கு நீங்கள் சுற்றுலா வர வேண்டும்

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15ந் தேதிக்கு முன்பு நீங்கள் எனக்கு ஆலோசனைகளை அனுப்புகிறீர்கள். இந்த ஆண்டும் உங்கள் ஆலோசனைகளை எனக்கு அனுப்புங்கள்.கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் நீங்கள் மூவர்ண கொடியுடன் உங்கள் செல்பியை இணைய தளத்தில் பதிவேற்ற வேண்டும்" இவ்வாறு அவர் கூறினார்.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டி அதிகாரப்பூர்வமாக அறிவித்தார் கமலா ஹாரிஸ்



வாஷிங்டன், ஜூலை 29


அமெரிக்கஜனாதிபதி தேர்தலில்கமலாஹாரிசுக்கு முன்னாள்ஜனாதிபதி ஒபாமா தனது ஆதரவை தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் வருகிற நவம்பர் 5ந்தேதி பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இதில் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் (வயது 78) போட்டியிடுவது உறுதியாகி உள்ளது.

அதே சமயம், ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி ஜோ பைடன் (81) வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். ஆனால் வயோதிகம் உள்ளிட்ட காரணங்களால் தேர்தல் போட்டியில் இருந்து ஜோ பைடன் விலக வேண்டும் என சொந்த கட்சியிலேயே அவருக்கு எதிர்ப்புகள் வலுத்தன. பின்னர் தேர்தல் போட்டியில் இருந்து ஜோ பைடன் விலகினார்.

மேலும் துணை ஜனாதிபதியும், இந்திய வம்சாவளியுமான கமலா ஹாரிசுக்கு(59) தனது முழு ஆதரவை அளிப்பதாக ஜோ பைடன் தெரிவித்தார். அதே போல் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா உள்பட, கட்சியின் பல்வேறு மூத்த தலைவர்கள் கமலா ஹாரிசுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக கமலா ஹாரிஸ் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். இது குறித்து 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ள அவர், "அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான அதிகாரப்பூர்வ படிவங்களில் இன்று கையெழுத்திட்டேன். ஒவ்வொரு வாக்கையும் பெறுவதற்கு கடுமையாக உழைப்பேன். நவம்பர் மாதம் நமது மக்கள் சக்தி பிரசாரம் வெற்றி பெறும்" என்று பதிவிட்டுள்ளார்.

## என்னை தேர்ந்தெடுத்தால்... நீங்கள் இனி எப்போதும் வாக்களிக்க வேண்டியதில்லை டிரம்ப் பரபரப்பு பிரசாரம்



வாஷிங்டன், ஜூலை 29

அமெரிக்காவில் வருகிற நவம்பர் 5ந்தேதி பொதுத்தேர்தல்நடைபெறஉள்ளது. இதில்குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் (வயது 78) போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. அதேசமயம், தேர்தல் போட்டியில் இருந்து விலகுவதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்தார். மேலும் துணை ஜனாதிபதியும், இந்திய வம்சாவளியுமான கமலா ஹாரிசுக்கு (59) தனது முழு ஆதரவை அளிப்பதாக ஜோ பைடன் தெரிவித்தார். இந்த சூழலில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாககமலாஹாரிஸ்அதிகாரப்பூர்வமாகஅறிவித்தார். இதனைத்தொடர்ந்து அமெரிக்காவில் தேர்தல் பிரசாரம் தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இந்நிலையில், என்னை தேர்ந்தெடுத்தால், நீங்கள் இனி எப்போதும் வாக்களிக்க வேண்டியதில்லை என்று டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக புளோரிடாவின் வெஸ்ட் பாம் கடற்கரையில் நடந்த பிரசாரத்தில் கிறிஸ்தவர்களிடையே உரையாற்றிய டிரம்ப், "நான் கிறிஸ்தவர்களை நேசிக்கிறேன். நான் ஒரு கிறிஸ்துவன். கிறிஸ்தவர்களே, வெளியே வந்து வாக்களியுங்கள். இன்னும் நான்கு ஆண்டுகள், நீங்கள் மீண்டும் வாக்களிக்க தேவையில்லை. நாங்கள் சரி செய்துவிடுவோம், அது உங்களுக்கே தெரியும்" என்று அவர் கூறினார்.டிரம்பின் இந்த கருத்துக்கள் இரு கட்சிகளும் தங்களின் தீவிர ஆதரவாளர்களை வாக்கெடுப்புக்கு வரவழைக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றன என்று கூறப்படுகிறது. இருப்பினும், டிரம்ப் பேசியது குறித்து, பிரசாரத்தின் செய்தித்தொடர்பாளர்ஸ்டீவன்சியுங்கூறுகையில், "டிரம்ப்நம்பிக்கையின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசுகிறார். இந்த நாட்டை ஒன்றிணைத்தல் மற்றும் ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் செழிப்பைக் கொண்டுவருவது பற்றி டிரம்ப் பேசினார்" என்று அவர் தெரிவித்தார்.

# ஒரு முதல்மந்திரியை இப்படித்தான் நடத்துவீர்களா..?

## முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்

சென்னை, ஜூலை 29

டெல்லியில் இன்று பிரதமர் மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியா கூட்டணி முதல் மந்திரிகள் பங்கேற்கவில்லை. மேற்கு வங்க முதல் மந்திரி மம்தா பானர்ஜி கூட்டத்தில் பங்கேற்று இருந்தார். பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் மம்தாபானர்ஜி கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தார்.





இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "நிதி ஆயோக் கூட்டத்தில் மத்திய அரசு பாரபட்சம் காட்டியது. இதனால் வெளிநடப்பு செய்துள்ளேன். பா.ஜனதா மற்றும் பா.ஜனதா கூட்டணி முதல் மந்திரிகள் 10 முதல் 20 நிமிடம் வரை பேசினார்கள். சந்திரபாபு நாயுடு 20 நிமிடங்கள் வரை பேசினார். அசாம், கோவா, சத்தீஸ்கர் மாநில முதல்மந்திரிகள் 10 முதல் 12 நிமிடங்கள் வரை பேசினார்கள். அவர்களுக்கு வாய்ப்பளித்த மத்திய அரசு எனக்கு வாய்ப்பளிக்கவில்லை. எதிர்க்கட்சிகளை சேர்ந்த முதல்மந்திரிகளில் நான் மட்டுமே பங்கேற்றேன். ஆனாலும் நிதி ஆயோக் கூட்டத்தில் என்னிடம் பாரபட்சம் காட்டினார்கள். வெறும் 5 நிமிடம் மட்டும் எனக்கு பேச வாய்ப்பளித்தனர். 5 நிமிடத்துக்கு மேல் பேசியபோது மைக்கை ஆப் செய்தனர்" என்று மம்தா பானர்ஜி குற்றம் சாட்டி இருந்தார்.

இந்நிலையில் மம்தா பானர்ஜிக்கு பேச வாய்ப்பு மறுப்பு தெரிவிக்கப்பட்டதற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "இதுதான் கூட்டுறவு கூட்டாட்சியா..? ஒரு முதல்மந்திரியை இப்படித்தான் நடத்துவதா..?

எதிர்க்கட்சிகள் நமது ஜனநாயகத்தின் ஒரு அங்கம் என்பதை மத்திய பா.ஜனதா அரசு புரிந்து கொள்ள வேண்டும். கூட்டுறவு கூட்டாட்சிக்கு தத்துவத்தில் எதிர்க்கட்சிகளின் உரையாடல்களுக்கு மரியாதை அளிக்கப்பட வேண்டும்" என்று அதில் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டில் கொலை சம்பவங்கள் அதிகரிப்பு: எடப்பாடி பழனிசாமி

தூத்துக்குடி, ஜூலை 29

தூத்துக்குடி விமான நிலையத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

கடலூரில் அதிமுக பிரமுகர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் போதையால் கொலைகள் அதிகரித்து வருகின்றன. அரசியல் பிரமுகர்கள், பெண்கள் என யாருக்குமே பாதுகாப்பு இல்லை. தமிழகத்தில் கொலைகள் நடக்காத நாளே இல்லை.



தமிழகம் கொலை மாநிலமாக மாறி உள்ளது கவலை அளிக்கிறது. தர்மபுரி தொப்பி வாப்பா பிரியாணி கடைக்குள்ளேயே புகுந்து இளைஞரை கொலை செய்துள்ளனர். மனிதர்களை கசாப்பு கடையில் ஆடுகளை வெட்டுவது போல் வெட்டுவது அதிகரித்துள்ளது.

தமிழக மக்களின் கோபத்தை மறைக்கவே மத்திய அரசுக்கு எதிராக திமுக போராட்டம் நடத்தியது.

திமுக மீது தமிழக மக்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள். நெல்லை காங்கிரஸ் நிர்வாகி ஜெயக்குமார் கொலை வழக்கில் இன்னும் துப்பு துலங்கவில்லை. தமிழகத்தில் காவல்துறையை ஏவல் துறையாக இந்த அரசு வைத்திருக்கிறது. காவல்துறைக்கு முழு சுதந்திரம் கொடுத்து சட்டம் ஒழுங்கு சீர்குலைவை தடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## முதல் மாநாடு சேலம் 'சென்டிமென்ட்' விஜய்க்கு கைகொடுக்குமா?

சென்னை, ஜூலை 29

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக திகழும் விஜய் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற பெயரில் அரசியல் கட்சியை தொடங்கியுள்ளார். இதையடுத்து கட்சியின் முதல் மாநாட்டை பிரமாண்டமாக நடத்த அவர் முடிவு செய்துள்ளார்.

அதன்படி, இந்த மாநாட்டை எங்கு நடத்துவது? என்பது தொடர்பாக அக்கட்சியின் நிர்வாகிகள் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2 நாட்களுக்கு முன்பு, சேலத்தை அடுத்த நாழிக்கல்பட்டியில் அமைந்துள்ள திடலில் தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாடு நடத்தலாமா? என்பது குறித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் அவ்விடத்திற்கு வந்து பார்வையிட்டு சென்றார்.

இதனால் சேலத்தில் மாநாடு நடத்த அதிக வாய்ப்பு இருப்பதாக விஜய் ரசிகர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர். இங்குதான் கடந்த 2014ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின் போது மறைந்த முதல்அமைச்சர் ஜெயலலிதா தனது தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார். அந்த தேர்தலில் அ.தி.மு.க. 37 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்றது.

இதேபோன்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், இதே திடலில் மாநாடு நடத்திய பின்னர் எதிர்க்



கட்சி தலைவர் அந்தஸ்தை பெற்றார். மேலும், கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தலின்போது, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் பிரதமர் மோடி இதே நாழிக்கல்பட்டி பகுதியில் உள்ள திடலில் தனது முதல் பிரசாரத்தை தொடங்கியதால் 3வது முறையாக தற்போது பிரதமராக பதவி ஏற்றுள்ளார்.

எனவே, அரசியல் கட்சியினர் வெற்றி மேல் வெற்றி பெற 'சென்டிமென்டாக' விளங்கும் சேலத்தில் நடிகர் விஜய் தனது கட்சியின் முதல் மாநாட்டை நடத்தினால் அவர் அரசியலில் ஒளிர, சாதனை படைக்க கைகொடுக்கும் என அவரது ரசிகர்கள் கருதுகிறார்கள்.

## சீமானை கட்டித் தழுவிய அண்ணாமலை



கோவை, ஜூலை 29

கோவை நீலாம்பூர் அருகே உள்ள தனியார் ஓட்டலில் ஜெம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பழனிவேலு எழுதிய சுயசரிதை புத்தகம் வெளியீட்டு விழா நேற்று மாலை நடைபெற்றது.

விழாவில் பா.ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழாவில் பங்கேற்க வந்த அண்ணாமலை அங்கு நின்று இருந்த சீமானை பார்த்ததும் அருகே சென்று அவரை கட்டி அணைத்து ஆறத்தழுவி அன்புடன் பேசிவிட்டு சென்றார்.

அரசியலில் இரு கட்சியினரும் எதிர் எதிர் கருத்துக்கள் முன்வைத்த நிலையில் புத்தகம் வெளியீட்டு விழாவில் ஒருவரை ஒருவர் ஆறத்தழுவியது அங்கு இருந்தவர்கள் மத்தியில் மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அத்துடன் இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வைரலாகி வருகிறது.

# 10 வயது சிறுமிக்கு அரிவாள் வெட்டு ஐ.டி ஊழியரால் பரபரப்பு



நாமக்கல், ஜூலை 29

சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே சக்திநாயக்கன் பாளையம் பால் சொசைட்டி பகுதியை சேர்ந்த சண்முகம் என்பவரது மகன் செந்தில் குமார் தனது வீட்டில் விளையாடி கொண்டிருந்த பக்கத்து வீட்டை சேர்ந்த பாபு என்பவரது 10 வயது கஷ்மிதா என்ற பெண் குழந்தையை கத்தியால் வெட்டியுள்ளார்.

குழந்தையின் சத்தம் கேட்டு செந்தில் குமாரின் தாய் சம்பூர்ணம் ஓடி வந்து சத்தம் போடவே அக்கம் பக்கத்தில் இருந்த தங்கராசு, முத்துவேலு ஆகியோர் செந்தில் குமாரை பிடிக்க ஓடி வந்தனர். அவர்கள் இருவரையும் செந்தில் குமார் கத்தியால் தாக்கினார்

இதில் சிறுமி உயிருக்கு ஆபத்தான நிலையில் விவேகானந்தா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

படுகாயம் அடைந்த தங்கராசு, முத்துவேல் இருவரும் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போலீசார் சம்பவம் குறித்து வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் செந்தில் குமார் பல ஆண்டுகளாக மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின் உடல் நிலை தேரிவந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன் பைக் சம்பந்தமாக குடும்பத்தினருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக மீண்டும் மனநலம் பாதிக்கப்பட்டு வேலைக்கு செல்லாமல் வீட்டில் அறையிலேயே யாருடனும் பேசாமல் இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 4 பெண் குழந்தைகளில் ஷோபாவில் அமர்ந்திருந்த கஷ்மிதாவை லேப்டாப் வைத்திருந்த மேஜைக்கு அடியில் இருந்த கத்தியை எடுத்து கழுத்தி வெட்டியுள்ளார் என்று விசாரணையில் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மத்திய நிதி மந்திரி பதில் சொல்வாரா..? ப.சிதம்பரம் கேள்வி




சென்னை, ஜூலை 29

சென்னை மெட்ரோ இரண்டாம் கட்ட பணிகளுக்கான நிதியை பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யாததை கண்டித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டார். அதில், "கடந்த மூன்று ஆண்டுகளாக மெட்ரோரெயில்திட்டத்தில் ஒரு ரூபாய் கூட விடுவிக்காமல் மத்திய அரசு காலம் தாழ்த்தி வருகிறது. தமிழ்நாடு அரசு தான் இந்த திட்டத்தை முடுக்கிவிட்டு செயல்படுத்தி வருகிறது. இது குறித்து கேட்டால், சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்ட திட்டம் என்பது மாநில அரசினுடையது என்று நாடாளுமன்றத்தில் பதிலளிக்கிறார்கள். அப்படியெனில் ரெயில்வே துறையை மாநில அரசுக்கு கொடுத்து விடுவார்களா..?

இந்த பட்ஜெட்டில் கோவை,மதுரைமெட்ரோ ரெயில் திட்டத்திற்கான ஒப்புதல் குறித்து மத்திய அரசு மூச்சு கூட விடவில்லை.

ஆனால் பல மாநிலங்களில் இதை விட சிறிய நகரங்களில்மெட்ரோரெயில் சேவைக்கு அனுமதி வழங்கி நிதி வாரி வழங்கப்பட்டிருக்கிறது. இது எந்த விதத்தில் நியாயம்" என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பி இருந்தார்.


இந்நிலையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பதில் சொல்லக் கடமைப்பட்டிருப்பதாக முன்னாள் மத்திய நிதி மந்திரியும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "122021 அன்று மத்திய அரசின் 202122 ஆண்டுக்கான வரவுசெலவு அறிக்கையை இந்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அப்பொழுது அவர் ஆற்றிய உரையின் பத்தி 59ல் குறிப்பிட்டது: "ரூ 63,246 கோடி செலவில் நிறைவேற்றப்படும் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு மத்திய அரசின் பங்களிப்பு நிதி (counterpart funding) வழங்கப்படும்"

பேசிய தமிழ்நாடு முதல் அமைச்சர் இதுவரை மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு ஒரு ரூபாய் கூடத் தரவில்லை என்று பகிரங்கமாக அறிவித்தார்

முதல்அமைச்சரின் கூற்றுக்கு மத்திய அரசு குறிப்பாக இந்திய நிதி மந்திரி பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார் என்று கருதுகிறேன்" என்று அதில் ப.சிதம்பரம் பதிவிட்டுள்ளார்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: ரவுடி சம்போ செந்தில் சிக்காமல் தப்பித்து வருவது எப்படி?





சென்னை, ஜூலை 29

சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் ஆம்ஸ்ட்ராங் கடந்த 5ந் தேதி பெரம்பூரில் வெட்டி படுகொலை செய்யப் பட்டார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பாக இதுவரை 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில், மலர்க்கொடி, சதிஷ், ஹரிஹரன் உள்ளிட்ட வழக்கறிஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் ரவுடி சம்போ செந்திலை 10 தனிப்படைகள் அமைத்து தேடி வரும் போலீஸார் சம்போ செந்தில் போலீசாரிடம் சிக்காமல் தப்பித்து எப்படி ? என்பது பற்றிய சுவாரஸ்ய தகவல் வெளியிட்டுள்ளனர். சென்னையில் உள்ள சம்போ செந்திலின் கூட்டாளிகள் அவருடன் பேசுவதற்காக பிரத்யேக செல்போன்களை பயன்படுத்தி வருவதாகவும், கூட்டாளியின் பிரத்யேக செல்போனுக்கு தொடர்பு கொள்ளும் சம்போ செந்தில், அவர்களின் சொந்த மொபைல் மூலம் விரும்பும் நபருக்கு போன் செய்து லவுடு ஸ்பீக்கரில் பேசுவதும் தெரிய வந்தது.

இப்படி பேசினால் சம்போ செந்தில் யாருடன் தொடர்பு கொள்கிறார் என்ற விவரங்களை பெற இயலாது என போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். வி.பி.என். தொழில்நுட்பத்தை பயன்படுத்தி டெலிகிராம், இன்ஸ்டாகிராம் மூலம் மட்டுமே தனது கூட்டாளிகளுடன் சம்போ செந்தில் பேசி வருவதும் விசாரணையில் அம்பலம் ஆகி உள்ளது.

தினந்தோறும் மதிய வேலைக்கு பிறகே கூட்டாளிகளுடன் பேசி வரும் சம்போ செந்தில் வெளிநாட்டில் இருந்து கொண்டு அந்த நாட்டின் நேரத்திற்கு ஏற்றாற்போல் சம்போ செந்தில் பேசுகிறாரா என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இன்ஸ்டாகிராம், டெலிகிராம் நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பி சம்போ செந்திலுடன் தொடர்பு கொண்ட நபர்களின் முழு விவரங்களையும் போலீசார் கேட்டுள்ளனர்.

# 'விரிவுரையாளர்கள் கோரிக்கைகள் குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும்' முத்தரசன் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 29

விரிவுரையாளர்கள் கோரிக்கைகள் குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"அரசு கலைக் கல்லூரிகளில் பணியாற்றி வரும் விரிவுரையாளர்கள் கோரிக்கைகள் குறித்து அரசு பரிசீலித்து நிறைவேற்றிதர வேண்டுகிறோம். கடந்த 15 ஆண்டுகளாக குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். ஊதியம் ரூ.50,000/ வரை உயர்த்துதல், உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்து போராடி வருகின்றார்கள். கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரியும் விரிவுரையாளர்கள் இனி வேறு பணிகளுக்கு செல்ல வாய்ப்பு இல்லாத நிலையில் அவர்களுக்கு பணிநிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை அரசு நிறைவேற்றிட வேண்டுகிறோம்." இவ்வாறு முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# உத்தவ் தாக்கரே பிறந்தநாள்; முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, ஜூலை 29

மராட்டிய மாநிலத்தின் முன்னாள் முதல்மந்திரி உத்தவ் தாக்கரே தனது பிறந்தநாளைகொண்டாடி வருகிறார். அவருக்கு பல்வேறு அரசியல் கட்சிகளின்தலைவர்கள்வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது;

"மராட்டிய மாநிலத்தின் முன்னாள் முதல்மந்திரி உத்தவ் தாக்கரேவுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்! தங்களது தனிச்சிறப்பான தலைமைத்துவம் 2024 மக்களவைப் பொதுத்தேர்தலில் சிவசேனா(UBT) மற்றும் 'இந்தியா' கூட்டணி மராட்டிய மாநிலத்தில் பல்வேறு சவால்களையும் மீறி வெற்றி பெற்றதில் முக்கியப் பங்காற்றியது. தாங்கள் தொடர்ந்து வலிமையோடும் வெற்றியோடும் திகழ விழைகிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 14 வயது சிறுமியை ஓராண்டாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய 8 பேர் கைது

சென்னை, ஜூலை 29

சென்னையில் 14 வயது சிறுமியை ஓராண்டாக சிறை வைத்து பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்பகுதிகளில் 4 வீடுகளில் சிறுமியை பூட்டி வைத்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட கும்பலை போலீசார் கைது செய்துள்ளனர். பரபரப்பான இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

சென்னை தாம்பரத்தை அடுத்த சேலையூர் அருகே உள்ள படுவஞ்சேரியில் தங்களது ஒரே மகளை அனாதையாக விட்டு விட்டு தாய்தந்தை இருவரும் தனித்தனியாக பிரிந்து சென்று விட்டனர். இதனால் அதே பகுதியை சேர்ந்த லட்சுமி என்ற பெண்ணின் அரவணைப்பில் 14 வயது சிறுமி இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் சிறுமி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக குழந்தைகள் நலத்துறை அதிகாரிகளுக்கும், சேலையூர் போலீசாருக்கும் தகவல் கிடைத்தது. இதையடுத்து குழந்தைகள் நல அதிகாரிகள் படுவஞ்சேரியில் உள்ள லட்சுமியின் வீட்டில் இருந்து சிறுமியை மீட்டு விசாரணை நடத்தினர். அப்போது சிறுமி அளித்த தகவல்கள் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

லட்சுமியும் அவருடன் இருக்கும் சிலரும் தன்னை வலுக்கட்டாயமாக பாலியல் தொழிலில் தள்ளிவிட்டதாகவும், பலர் தன்னிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டிருப்பதாகவும் பலர் தன்னிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டிருப்பதாகவும் திடுக்கிட வைக்கும் வகையில் வாக்குமூலம் அளித்தார்.

இதுபற்றி சேலையூர் போலீசில் புகார் அளிக்கப் பட்டது. மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அப்போது சிறுமி பாலியல் தொழிலில் ஈடுபட்டது தொடர்பாக அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கிடைத்தன. அதன் விவரம் வருமாறு:

14 வயது சிறுமியை சில ஆண்டுகளுக்கு முன்பே தாயும் தந்தையும் தவிக்க விட்டு விட்டு திசைமாறி சென்றுள்ளனர். இருவரும் வேறு திருமணம் செய்து கொண்டு பெற்ற மகளைப் பற்றி கவலைப் படாமல் தனித்தனியாக வாழ்ந்து வருகின்றனர். இதனால் சிறுமி முழுக்க முழுக்க லட்சுமியின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்துள்ளார்.

இதையடுத்து லட்சுமி ஆதரவற்ற சிறுமியை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி பணம் சம்பாதித்து வந்து உள்ளார். லட்சுமியுடன் சேர்ந்து அவரது சகோதரி கவிதா, மாமியார் கற்பகம், 2வது கணவரான பிரகாஷ் ஆகியோரும் சிறுமியை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வந்திருப்பதும் தெரிய வந்தது.

இதையடுத்து போலீசார் இவர்கள் 4 பேரையும் அதிரடியாக கைது செய்து விசாரணை நடத்தினர். அப்போது சேலையூர் படுவஞ்சேரியில் உள்ள சிறுமியின் தாயின் உறவினர் வீட்டில் வைத்து முதலில் சிறுமி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக அதே பகுதியில் உள்ள இன்னொரு வீடு, செங்கல்பட்டு மற்றும் சென்னை கே.கே.நகரில் உள்ள வீடு என மொத்தம் 4 வீடுகளில் வைத்து ஈவுஇரக்கமின்றி சிறுமி பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதையும் போலீசார் கண்டு பிடித்தனர்.

இதையடுத்து சிறுமியிடம் தகாத முறையில் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டவர்கள் யார் யார்?என்கிறவிவரங்களை சேகரித்த போலீசார் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து பூசாரி மற்றும் புரோகிதரான சீனிவாசன் மற்றும் தாமோதரன் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் 6 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வழக்கில் மேலும் 2 பேரை போலீசார் இன்று கைது செய்துள்ளனர். இதன் மூலம் சிறுமி பாலில் வழக்கில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் தாமோதரன், சீனிவாசன் மற்றும் இன்று கைதான 2 பேர் ஆகிய 4 பேரும் சிறுமி என்றும் பாராமல் அவரிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து 3 பெண்கள் உள்பட 8 பேர் மீதும் போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

பள்ளிக்கரணை துணை கமிஷனர் கவுதம் கோயல் மேற்பார்வையில், சேலையூர் உதவி கமிஷனர் கிறிஸ்டின் ஜெயசீல், இன்ஸ்பெக்டர் சந்துரு, மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராக்குமதி மற்றும்போலீஸ் படையினர் இந்த வழக்கில் மேலும் யாருக்கும் தொடர்பு உள்ளதா? என்பது பற்றியும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இது போன்று சிறுமிகளிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரித்துள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுமியை போலீசார் காப்பகத்தில் வைத்து பராமரித்து வருகிறார்கள்.

# மின்சார ரெயில்கள் ரத்து எதிரொலி.. பேருந்து நிலையங்களில் அலைமோதும் பயணிகள் கூட்டம்



சென்னை, ஜூலை 29

தாம்பரம் பணிமனையில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக இன்று (சனிக்கிழமை) மற்றும் நாளை (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய 2 நாட்கள் மின்சார ரெயில் சேவைகள் காலை மற்றும் இரவு நேரங்களில் முன்னதாக வெளியிட்ட அறிவிப்பின் படி ரத்து செய்யப்படுகிறது. அதாவது, 55 மின்சார ரெயில்கள் ரத்துசெய்யப் பட்டுள்ளன. காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை இயக்கப்படும் பெரும்பாலான ரெயில்கள் ரத்துசெய்யப் பட்டுள்ளன.

ரெயில்கள் ரத்துசெய்யப்பட்டுள்ளதால் ரெயில் பயணம் மேற்கொள்ள வந்த பயணிகள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். மேலும், ரெயில்கள் ரத்து காரணமாக பேருந்து நிலையங்களிலும், பேருந்துகளிலும் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

குறிப்பாக, ஜி.எஸ்.டி. சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. அதிக அளவிலான வாகனங்கள் சாலைகளை ஆக்கிரமித்துள்ளன. இதனால் சாலைகளில் வாகனங்கள் ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பணியில் காவலர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

# நீலகிரி முன்னாள் பா.ஜ.க எம்.பி மாஸ்டர் மதன் உடல்நலக்குறைவால் காலமானார்



கோவை, ஜூலை 29

கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள பிரஸ் காலனி பாலாஜி கார்டனில் வசித்து வந்தவர் மாஸ்டர் மதன்(வயது93). இவர் நீலகிரி நாடாளுமன்றதொகுதியில்பா.ஜ.க சார்பில் 1998 மற்றும் 1999 ம் ஆண்டுகளில் போட்டியிட்டு வெற்றி பெற்று 2 முறை எம்பியாக பதவி வகித்துள்ளார்.

அண்மைக்காலமாக உடல் நலம் பாதிக்கப் பட்டு, அதற்காக வீட்டில் இருந்தபடி தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்று இரவு 11.10 மணிக்கு வீட்டில் இருந்த மாஸ்டர் மதன் காலமானார். இது பற்றிய தகவல் அறிந்ததும் கோவை மாவட்ட பா.ஜ.க நிர்வாகிகள், தொண்டர்கள் என அனைவரும் இன்று காலை அவரது வீட்டிற்கு வந்தனர். அங்கு வைக்கப்பட்டிருந்த மாஸ்டர் மதன் உடலுக்கு அவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

# வேகமாக நிரம்பும் மேட்டூர் அணை: பயிர்க்கடனுக்கு ஏற்பாடு செய்யுங்கள் அன்புமணி கோரிக்கை



சென்னை, ஜூலை 29

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

"காவிரி நீர்ப்படிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக கர்நாடகத்தில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகள் நிரம்பி வழிவதால் மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 80 ஆயிரம் கன அடியாக அதிகரித்திருக்கிறது. அணையின் நீர்மட்டம் 100 அடியைத் தாண்டி விட்ட நிலையில், அடுத்த சில நாட்களில் அணை நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கர்நாடக அணைகளில் இருந்து வினாடிக்கு ஒரு லட்சம் கன அடிக்கும் கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்படும் நிலையில், வெள்ள ஆபத்தை தடுக்கும் வகையிலும், காவிரி பாசன மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கான முன்னேற்பாடுகளை தொடங்கும் வகையிலும், அணை நிரம்பும் வகையில் காத்திருக்காமல் உடனடியாக தண்ணீர் திறக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

கர்நாடக அணைகளில் இருந்து கடந்த ஜூலை 16 ஆம் நாள் வரை தமிழ்நாட்டிற்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடப்படவில்லை. அதன்பின், அடுத்த இரு வாரங்களில் அணை நிரம்பும் சூழல் உருவாகும்; அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. அதனால், குறுவை சாகுபடிக்கே தண்ணீர் இல்லாமல் தவித்த காவிரி பாசன மாவட்ட உழவர்கள், சம்பா சாகுபடியை தொடங்குவது குறித்து நினைத்துக் கூட பார்க்கவில்லை. மேட்டூர்அணை அடுத்த ஓரிரு நாட்களில் திறக்கப்படவுள்ள நிலையில், அதை பயன்படுத்தி காவிரி பாசன மாவட்டங்களில் மிக அதிக பரப்பளவில் சம்பா சாகுபடி செய்வதற்கான வசதிகளை தமிழக அரசு செய்து தர வேண்டும். காவிரி பாசன மாவட்டங்களில் மட்டும் குறைந்தது 13 லட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அதற்குத் தேவையான உரம், விதை நெல் உள்ளிட்ட இடுபொருட்கள் வேளான் துறை அலுவலகங்களிலோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலோ போதிய அளவில் இருப்பு இல்லை. காவிரி பாசனக் கால்வாய்கள் முழுமையாகதூர்வாரப்படாததால், கடைமடை பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் சென்று சேருவதற்கும் வாய்ப்பில்லை. அதனால், தண்ணீர் திறந்து விட்டாலும் கூட போதிய பரப்பளவில் சம்பா சாகுபடி செய்யப்படுவது சாத்தியமற்றதாகி விடும். இவை அனைத்துக்கும் மேலாக சம்பா சாகுபடி பணிகளைத் தொடங்க குறைந்தது ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வரை செலவாகும். ஆனால், கடந்த ஆண்டு சம்பா, குறுவை ஆகிய இரு பருவங்களிலும் நெல் சாகுபடி தோல்வியடைந்ததால், பெரும்பான்மையான உழவர்களிடம் பணம் இல்லை. இதையும் தமிழக அரசு கருத்தில் கொள்ள வேண்டும். காவிரி பாசன மாவட்டங்களில் சம்பா சாகுபடி செய்யப்படுவதற்கு வசதியாக வேளாண் துறை அலுவலகங்கள் வாயிலாக விதை நெல்கள், கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உரங்கள் மற்றும் பயிர்க்கடன் கிடைப்பத ற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தர்மபுரியில் குவாட்டருக்காக தந்தையை ஓட ஓட வெட்டிய மகன் பரபரப்பு



தர்மபுரி, ஜூலை 29
தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் சோம்பள்ளி கொல்லப்பட்டியில் அரசு மதுபான கடை எண் :2845 மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது அந்த கடை அருகில் அரசு உயர் நிலைப்பள்ளி செயல்பட்டு வரும் நிலையில் நேற்று மாலை 6:00pm மணி அளவில் கடை முன்பாக குடியிருக்கும் சின்னசாமி/65 என்பவர் மகன் ரவிக்குமார்என்றமுனியப்பன் தந்தையிடம் மதுவிற்கு பணம் கேட்டு தர மறுத்த தந்தையை அரசு அனுமதி இல்லாமல் செயல்பட்டு வரும் பாரில் ஓட விரட்டி தந்தையின் கால்கள் கைகள் இரண்டையும் வெட்டி கற்களால் நெஞ்சின் மீது போட்டு தாக்கி பாருக்குள்ளேயே ரத்த வெள்ளத்தில் துடித்து கொண்டிருக்கும் ஒரு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் பார் உரிமையாளர் சிவகங்கை சேர்ந்த மணிகண்டன் என்பவரும் மூர்த்தி என்பவரும் காவல்துறைக்கு எந்த ஒரு தகவலும் கொடுக்காமல் வேடிக்கை பார்த்த நிலையில் பக்கத்தில் இருந்தவர்கள் சுமார் நான்கு மணி நேரம் கழித்து காவல்துறைக்கும் 108 ஆம்புலன்ஸ் இருக்கும் தகவல்தெரிவித்து அவரை தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு சுமார் 9:30 மணி அளவில் சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்டது.

# அரசு பஸ்களில் குத்தகை முறையில் ஓட்டுநர்கள் நியமனம் சமூகநீதிக்கு எதிரானது: ராமதாஸ்



சென்னை, ஜூலை 29
பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு 1200 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை குத்தகை முறையில் நியமிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை தமிழக அரசு கோரியிருக்கிறது. தொழிலாளர்களின் உழைப்பை மதித்து, அதற்கேற்ற ஊதியத்தையும், சமூகப் பாதுகாப்பையும் வழங்க வேண்டிய தமிழக அரசே, அவர்களின் உழைப்பைச் சுரண்டி, சமூகநீதியை படுகொலை செய்வது கண்டிக்கத்தக்கது. சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில், 700 ஓட்டுநர்களையும், 500 நடத்துநர்களையும் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக தனியார் மனிதவள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகளும், தொழில்நுட்பப் புள்ளிகளும் கோரப்பட்டுள்ளன.

அதாவது, மாநகரப் பேருந்துகளை இயக்குவதற்குத் தேவையான ஓட்டுநர்கள், நடத்துநர்களை மாநகரப் போக்குவரத்துக் கழகமே தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக, மனிதவள நிறுவனம் தேர்ந்தெடுத்து அனுப்பும் ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் பயன்படுத்திக் கொள்ளும். அவர்களுக்கான ஊதியத்தை நிரந்தர பணியாளர்களுக்கு இப்போது எவ்வளவு ஊதியம் வழங்கப்படுகிறதோ, அதை விட குறைவான அளவில் கணக்கிட்டு, சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்துக்கு மாநகர போக்குவரத்துக் கழகம் வழங்கும்.

மாநகரப் போக்குவரத்துக் கழகம் வழங்கும் தொகையை பெற்றுக் கொள்ளும் நிறுவனம், அதில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு மிகக் குறைந்த தொகையை ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு வழங்கும். இது வழக்கமாக வழங்கப்பட வேண்டிய ஊதியத்தில் பாதிக்கும் குறைவாகவே இருக்கும். ஊதியம் தவிர, ஓய்வூதியம், பணிக்கொடை உள்ளிட்ட எந்த உரிமையும் வழங்கப்படாது.

இவற்றை விட பெரிய அநீதி, தனியார் மனிதவள நிறுவனங்கள் மூலம் செய்யப்படும் நியமனங்களில் எந்த வகையான இட ஒதுக்கீடும் வழங்கப்படாது. மொத்தத்தில் குத்தகை முறையில் ஓட்டுனர்கள் மற்றும் நடத்துநர்களை நியமிக்கும் போது சமூக நீதியும், தொழிலாளர்களின் உரிமைகளும் நிரந்தரமாக குழி தோண்டி புதைக்கப்பட்டு விடும். தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி, சமூகநீதியை குழிதோண்டி புதைக்கும் செயலில் திமுக அரசு ஈடுபடுவது இது முதல் முறையல்ல. கடந்த ஆண்டு அக்டோபர் & நவம்பர் மாதங்களில் இதே மாநகரப் போக்குவரத்துக் கழகத்துக்கு குத்தகை அடிப்படையில் ஓட்டுனர்கள் மற்றும் நடத்துநர்களை நியமிக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், "இது அபாயகரமான சோதனை.

தனியார் நிறுவனங்கள் மூலம் ஓட்டுநர், நடத்துநர்கள் நியமிக்கப் பட்டால், இட ஒதுக்கீடு பின்பற்றப்படாது. அவர்களால்விபத்து ஏற்பட்டால், இழப்பீடு வழங்குவதில் சிக்கல்கள் எழும். இந்த முறையை கைவிட்டு, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் ஓட்டுநர், நடத்துநர் காலிப்பணியிடங்களை, நேரடித் தேர்வு மூலம் நிரப்ப வேண்டும்'' எனத் தீர்ப்பளித்தது.

அதன்பிறகும் திருந்தாத தமிழக அரசு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோயில் ஆகிய மண்டலங்களில் ஓட்டுனர்கள் மற்றும் நடத்துநர்களை குத்தகை முறையில் நியமிப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக உயர்நீதிமன்றத்தால் கடந்த ஆண்டு ரத்து செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளியை மாநகரப் போக்குவரத்துக் கழகம் மீண்டும் கோரியுள்ளது. தொழிலாளர்களின் உரிமைகளை மதிக்க அரசு தயாராக இல்லாததையே இது காட்டுகிறது.

சமூகநீதிக்கு எதிரான குத்தகை முறையில் 1200 ஓட்டுநர்களும், நடத்துநர்களும் நியமிக்கப்படும் போது இடஒதுக்கீடு கடைபிடிக்கப்படாது. அதனால், 69% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு கிடைக்க வேண்டிய 318 வேலைவாய்ப்புகளும், இஸ்லாமியர்களுக்கு கிடைக்க வேண்டிய 42 வேலைவாய்ப்புகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கிடைக்க வேண்டிய 240 வேலை வாய்ப்புகளும், பட்டியலினம் மற்றும் பழங்குடியினத்தவருக்கு கிடைக்க வேண்டிய 228 வேலைகளும் பறிக்கப்படும். இந்த அநீதியை அரங்கேற்றும் தி.மு.க.வுக்கு சமூகநீதி குறித்து பேசுவதற்கு தகுதியுண்டா?

தொழிலாளர் உரிமையும், சமூக நீதியும் தெருவில் கிடந்து எடுக்கப்பட்டவையல்ல. இட ஒதுக்கீட்டுக்காக நடத்தப்பட்ட போராட்டங்கள் எண்ணற்றவை; இந்தப் போராட்டத்தில் பலி கொடுக்கப்பட்ட உயிர்கள் கணக்கில் அடங்காதவை. அதேபோல், அதிகார வர்க்கத்தினரால் சுரண்டப்படும் தொழிலாளர் உரிமையை மீட்டெடுப்பதற்காக உலகம் முழுவதும் மிகப்பெரிய அளவில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றின் பயனாகவே 8 மணி நேர பணியும், பிற தொழிலாளர் உரிமைகளும் தொழிலாளர்களால் வென்றெடுக்கப்பட்டன.

அவற்றின் சாட்சியாகவே செப்டம்பர் 17 ஆம் தேதி சமூகநீதி நாளும், மே ஒன்றாம் தேதி பாட்டாளிகள் நாளும் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆனால், போராடிப் பெற்ற இரு உரிமைகளையும் தி.மு.க.அரசு, கொடூரமாக பறித்திருக்கிறது. இதை விட கொடிய சமூக அநீதியை எவரும் இழைக்கமுடியாது. இதன் மூலம் தொழிலாளர் உரிமைக்கும், சமூகநீதிக்கும் முதல் எதிரி தி.மு.க. தான் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் வாக்குகளை வாங்கி ஆட்சிக்கு வந்த தி.மு.க., தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு பதிலாக சமூகநீதி நாளான செப்டம்பர் 17 ஆம் தேதியையும், தொழிலாளர்கள் நாளான மே ஒன்றாம் தேதியையும் கருப்பு நாளாக அறிவித்து விடலாம். தொழிலாளர்களின் உரிமைகளையும், சமூகநீதியையும் படுகொலை செய்து வரும் தி.மு.க.வுக்கு தமிழக மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

# பட்ஜெட்டில் நிதி ஒதுக்காமல் புறக்கணிப்பு தமிழகம் முழுவதும் தி.மு.க. ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜூலை 29
மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்காததைகண்டித்துதி.மு.க. சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் இன்று மத்திய அரசின் செயலை கண்டித்து தி.மு.க.வினர் போராட்டத்தை நடத்தினர். அனைத்து மாவட்ட செயலாளர்களும் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், எம்.பி., எம்.எல்.ஏக்கள் தி.மு.க.வின் பிற அணி நிர்வாகிகள் தீவிரமாக கலந்து கொண்டு மத்திய அரசின் போக்கை கண்டித்து கோஷமிட்டனர்.

சென்னையில் கலெக்டர் அலுவலகம், சைதாப்பேட்டை சின்னமலை, தாம்பரம், ஆவடி ஆகிய 4 இடங்களில் தி.மு.கவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கலெக்டர் அலுவலகம் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தயாநிதி மாறன் எம்.பி. தலைமை தாங்கினார்.

மாவட்ட செயலாளர்கள் ஆர்.டி.சேகர், மாதவரம் சுதர்சனம், மேயர் பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி. எம்.எல்.ஏக்கள், ஜோசப் சாமுவேல், தாயகம் கவி, வெற்றியழகன், பரந்தாமன், எபினேசர், ஐட்ரீம் மூர்த்தி, கே.பி.சங்கர், முன்னாள் எம்.எல்.ஏ. ரங்கநாதன், மண்டல தலைவர் நேதாஜி, கணேசன், இலக்கிய அணி செயலாளர் பி.டி.பாண்டிச்செல்வம் உள்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதியை ஒதுக்க பாரபட்சம் காட்டாதே, ஒன்றிய அரசே தமிழ்நாட்டை புறக்கணிக்காதே! தமிழ்நாட்டிற்கு நிதி எங்கே? வெள்ள நிவாரண நிதி, மெட்ரோ ரெயில் நிதி ஒதுக்காதது ஏன்? என மத்திய அரசுக்கு எதிராக கோஷமிட்டனர்.

சைதாப்பேட்டை சின்னமலையில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு தலைமை தாங்கினார். இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மகேஷ்குமார், எம்.எல்.ஏ.க்கள், மயிலை த.வேலு, எழிலரசன், காரப்பாக்கம் கணபதி மற்றும் பூச்சி முருகன், அன்பகம் கலை, காசி முத்து மாணிக்கம், தனசேகரன், கண்ணன், தி.நகர் பி.சக்திவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து தாம்பரம் சண்முகம் சாலையில் இன்று தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஸ்ரீபெரும்புதூர் தொகுதி எம்.பி. டி.ஆர்.பாலு தலைமை தாங்கினார். தாம்பரம் எம்.எல்.ஏ. எஸ்.ஆர்.ராஜா வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தில் எம்.எல்.ஏ.க்கள் பல்லாவரம் இ.கருணாநிதி, செங்கல்பட்டு வரலட்சுமி மதுசூதனன், தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம், மாவட்ட ஒன்றிய குழு தலைவர் படப்பை மனோகரன், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், இ.ஜோசப்அண்ணாதுரை, வே.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், ஏ.கே.கருணாகரன், செம்பாக்கம் இரா. சுரேஷ், இ.எஸ்.பெர்னாட், கவுன்சிலர்கள் பெருங்களத்தூர் சேகர், சிட்லபாக்கம் சுரேஷ், ஜோதி குமார், புகழேந்தி, நரேஷ் கண்ணா, பெரியநாயகம், நிர்வாகிகள் ரஞ்சன், இரா.செல்வகுமார், எஸ்.ஜி.கருணாகரன், வேல்மணி பி.ரகுநாதன் உள்பட பலர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினார்கள்.

ஆவடி மாநகராட்சி அருகில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் சா.மு.நாசர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., ஆவடி மேயர் உதயகுமார், மாநகர செயலாளர் சண் பிரகாஷ் உள்பட ஏராள மானவர்கள் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

# நிர்பயா நிதி திட்டப்பணிகள் அரசு விளக்கம்



சென்னை, ஜூலை 29
பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக்காக நிர்பயா நிதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் தற்போதைய நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்யும்படி உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தமிழக உள்துறை செயலாளர் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் நிர்பயா நிதி மூலம் தமிழகத்தில் காவல் நிலையங்களில் பெண்கள் ஆதரவு பிரிவை அமைத்து வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், காவல்துறையில் புதிதாக 13 ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே செயல்பட்டு வந்த 19 பிரிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே போல பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றம் தடுப்பு திட்டம், சைபர் தடயவியல் ஆய்வகங்களுக்கு கருவிகள் கொள்முதல் செய்தது உள்ளிட்ட திட்டங்களுக்கு நிர்பயா நிதி பயன்படுத்தப்பட்ட விவரங்கள் குறித்து விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது.

இதே போல பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றம் தடுப்பு திட்டம், சைபர் தடயவியல் ஆய்வகங்களுக்கு கருவிகள் கொள்முதல் செய்தது உள்ளிட்ட திட்டங்களுக்கு நிர்பயா நிதி பயன்படுத்தப்பட்ட விவரங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

# 101 அடியை எட்டிய மேட்டூர் அணையின் நீர்மட்டம்



கிருஷ்ணகிரி, ஜூலை 29
கர்நாடகாவில் பெய்துவரும் தென்மேற்கு பருவமழையின் காரணமாகஅங்குள்ளகிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி, ஹேரங்கி ஆகிய அணைகள் நிரம்பியது. மேலும் மாநிலத்தில் உள்ள அனைத்து ஆறுகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியான குடகு மாவட்டத்தில் இன்றும் கனமழை பெய்து வருகிறது.

கிருஷ்ண ராஜசாகர் மற்றும் கபினி அணைகளில் இருந்து தமிழகத்துக்கு காவிரிஆற்றில்வினாடிக்கு 1 லட்சத்து 43 ஆயிரத்து 506 கனஅடி தண்ணீர்திறக்கப்பட்டு வந்து கொண்டு இருக்கிறது. இந்த தண்ணீர் ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணைக்கு வந்து கொண்டு இருக்கிறது.

நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் மேட்டூர் அணையின் நீர் மட்டமும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியது.

இந்நிலையில் தற்போது மேட்டூர் அணையின் நீர் மட்டம் 101.70 அடியாக உயர்ந்தது.

வினாடிக்கு 1,18,296 கன அடியாக உயர்ந்து வருகிறது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகாரிப்பதால் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. அணையின் நீர் இருப்பு 67.06 டி.எம்.சியாக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணை நீர் மட்டம் வேகமாக நிரம்பி வரும் நிலையில் காவிரி டெல்டா பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

அணை நிரம்பி வரும் நிலையில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுமா என்று எதிர்பார்த்து உள்ளனர்.

# மனைவி பிரிந்து சென்ற விரக்தியில் வாலிபர் தற்கொலை: அதிர்ச்சியில் பாட்டியும் சாவு



திருச்சி, ஜூலை 29
திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் அயனாவரம் காலனியை சேர்ந்தவர் நாசர்அலி. இவரது மகன் ஷாஜகான் (வயது 22). கூலி தொழிலாளி. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஷாஜகானுக்கும், தஞ்சையை சேர்ந்த பாத்திமா (22) என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது.

பின்னர் கணவன்மனைவி இடையே அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டதாக தெரிகிறது. இதையடுத்து கர்ப்பிணியாக இருந்த பாத்திமா கணவரிடம் கோபித்துக் கொண்டு தஞ்சையில் உள்ள தனது தாய் வீட்டிற்கு சென்று விட்டார். ஷாஜகான் பலமுறை சென்று தனது மனைவியை அழைத்தும், அவர் வரவில்லை என்று கூறப்படுகிறது. கடந்த 6 மாதங்களுக்கு முன்பு பாத்திமாவுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் குழந்தை பிறந்த தகவலை கூட தங்களுக்கு சொல்லாததால் ஷாஜகான் மன விரக்தியில் இருந்துள்ளார். இந்நிலையில் ஷாஜகான் நேற்று வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதையடுத்து அவரது உடலை பார்த்து உறவினர்கள் கதறி அழுதனர். அப்போது ஷாஜகானின் பாட்டியானஅமீனா(75) பேரன் இறந்த அதிர்ச்சியில் கதறி அழுதபோது மயங்கி விழுந்தார். உறவினர்கள் அவர் அருகே சென்று பார்த்தபோது அவர் உயிரிழந்தது தெரியவந்தது. பேரன்

இறந்த அதிர்ச்சியில் பாட்டியும் உயிரிழந்தது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# சென்னை: மெட்ரோ ரெயிலில் கஞ்சா பயன்படுத்திய இளைஞர் கைது



சென்னை, ஜூலை 29
சென்னை தண்டையார் பேட்டையை சேர்ந்தவர் புவனேஷ்(24). இவர் சென்னையில் உணவு டெலிவரி செய்யும் பணி செய்து வருகிறார். இந்த நிலையில், மெட்ரோ ரெயிலில் பயணிகளுக்கு மத்தியில் புவனேஷ் சர்வ சாதாரணமாக கஞ்சா பயன்படுத்தியுள்ளார்.

மெட்ரோ ரெயிலில் இளைஞர் கஞ்சா பயன்படுத்தியதாக புகைப்படம் வெளியிட்டு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் விமர்சனம் செய்திருந்தார். இதையடுத்து மெட்ரோ ரெயிலில் கஞ்சா பயன்படுத்திய புவனேஷை தேனாம்பேட்டை போலீசார் கைது செய்தனர். அவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருவள்ளூர் மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை கலெக்டர் அறிவிப்பு




திருவள்ளூர்,ஜூலை 29
திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் அமைந்துள்ள முருகன் கோயில், முருகனின் ஆறுபடை வீடுகளில், ஐந்தாம் படை வீடாகத் திகழ்கின்றது. இங்குஆடிகிருத்திகையை வெகு விமரிசையாக கொண்டாடப்படும். இந்த ஆண்டு ஆடி கிருத்திகை வருகிற இன்று கொண்டாடப்பட உள்ளது.

இந்த நிலையில், ஆடி கிருத்திகையை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவித்து மாவட்ட கலெக்டர் பிரபு சங்கர் உத்தரவிட்டுள்ளார். இந்த விடுமுறையை ஈடு செய்யும் விதமாக ஆகஸ்ட் 10 (சனிக்கிழமை) வேலை நாளாக செயல்படும் எனவும் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# லக்கி பாஸ்கர் படத்தின் டைட்டில் பாடல் வெளியானது

நடிகர் துல்கர் சல்மானின் பிறந்த நாளையொட்டி 'லக்கி பாஸ்கர்' படத்தின் டைட்டில் பாடல் வெளியாகியுள்ளது.




வெங்கி அட்லூரி இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் வெளியான 'வாத்தி' திரைப்படம் ரூ.100 கோடிக்கு மேல் வசூல் செய்து வெற்றி படமாக அமைந்தது. அப்படத்தின் வெற்றியை தொடர்ந்து, நடிகர் துல்கர் சல்மான் நடிக்கும் படத்தை வெங்கி அட்லூரி இயக்குகிறார். இந்த படத்துக்கு 'லக்கி பாஸ்கர்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை மீனாட்சி சவுத்ரி நடிக்கிறார். சித்தாரா எண்டர்டெயின்மென்ட் மற்றும் பார்ச்சூன் 24 ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் இந்த படத்துக்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்கிறார்.

'லக்கி பாஸ்கர்' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர், டீசர் வெளியாகி இணையத்தில் வைரலானது. 'சீதா ராமம்' படத்தின் வெற்றியை தொடர்ந்து துல்கர் சல்மான் நடிக்கும் இரண்டாவது தெலுங்கு படம் 'லக்கி பாஸ்கர்' என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இப்படம் செப்டம்பர் 27ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், நடிகர் துல்கர் சல்மானின் பிறந்த நாளை முன்னிட்டு 'லக்கி பாஸ்கர்' படத்தின் டைட்டில் டிராக் பாடலை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

# தனுஷுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த துஷாரா விஜயன்



தனுஷ் தனது 50வது திரைப்படமான 'ராயன்' படத்தை இயக்கி நடித்துள்ளார். சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்தில், எஸ்.ஜே.சூர்யா, செல்வராகவன், பிரகாஷ் ராஜ், சந்தீப் கிஷான், துஷாரா விஜயன், அபர்ணா பாலமுரளி, வரலட்சுமி சரத்குமார் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். சமீபத்தில் இந்த படத்தின் பாடல்கள் மற்றும் டிரெய்லர் வெளியாகி கவனம் பெற்றன. ராயன் படம் கடந்த வெள்ளிக்கிழமை திரையரங்குகளில் வெளியானது. இப்படம் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில் ராயன் படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ள துஷாரா விஜயன் தனது எக்ஸ் பக்கத்தில் நடிகர் தனுஷுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவரது எக்ஸ் பதிவில், "25.11.2023 என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். D50 படம் தொடர்பாக தனுஷ் உங்களை சந்திக்க விரும்புகிறார் என்ற போன் கால் மூலம் எல்லாம் தொடங்கியது. இது கனவுபோல் இருக்கிறது. இறுதியாக நான் அவரை சந்தித்தேன். அந்த உணர்வை என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியவில்லை. தற்போது 'ராயன்' வெளியாகி பிளாக்பஸ்டர் ஹிட் ஆகியுள்ளது. தனுஷின் வெற்றியை என்னுடையது போல் உணர்கிறேன். இந்த பயணத்தில் நான் நிறைய கற்றுக்கொண்டேன். நீங்கள் ஒரு முன்னுதாரணம், லெஜண்ட் தனுஷ் சார். துர்கா கதாபாத்திரத்திற்கு நான் பொருத்தமானவள் என நம்பியதற்கு நன்றி" என்று தெரிவித்துள்ளார்.

# அம்மாவுக்கு உருக்கமாக பிறந்தநாள் வாழ்த்து சொன்ன விக்னேஷ் சிவன்!


இயக்குநர் விக்னேஷ் சிவன் 'போடா போடி' படத்தின் மூலமாக அறிமுகமானார். அந்த படத்தில் சிலம்பரசன், வரலட்சுமி சரத்குமார் ஆகியோர் நடித்திருந்தனர். 2012ம் ஆண்டு வெளியான போடா போடி தோல்வி அடைந்ததை அடுத்து மூன்று வருடங்கள் திரைப்படம் இயக்காமல் இருந்தார். அதனையடுத்து நானும் ரவுடிதான் படத்தை இயக்கினார் விக்னேஷ் சிவன். தனுஷ் தயாரிப்பில் உருவான அப்படத்தில் நயன்தாரா நடித்தார். இதன் மூலம் அனைவரும் திரும்பிப்பார்க்கும் இயக்குநராக மாறினார் விக்னேஷ். விக்னேஷ் சிவனும் நடிகை நயன்தாராவும் காதலித்து திருமணம் செய்துக்கொண்டனர். இந்த தம்பதிக்கு உயிர் மற்றும் உலகம் ஆகிய 2 மகன்கள் உள்ளனர்.

சமூக வலைதள பக்கங்களில் எப்போதும் ஆக்டிவாக இருக்கக்கூடிய விக்னேஷ் சிவன் அவ்வபோது தனது மனைவி நயன்தாரா மற்றும் குழந்தைகளுடன் எடுத்துக் கொள்ளும் புகைப்படங்களை இணையத்தில் பகிர்ந்து வருவார். அந்த வகையில் தற்போது தனது அம்மாவின் பிறந்த நாளை முன்னிட்டு அழகிய புகைப்படங்களுடன் வாழ்த்துக்களை தெரிவித்து இருக்கின்றார். அதில் அவர் தெரிவித்திருந்ததாவது "ஒவ்வொரு முறையும் நான் என் குழந்தைகளை பார்க்கும்போது நிரம்பி வழியும் அன்பின் அளவை விவரிக்க முடியாது. அதே நேரத்தில் காதல் எத்தனை வருடங்கள் கடந்தாலும் குறைந்து போவதில்லை . பெற்றோர்கள் நம்மை தினமும் அப்படித்தான் உணர்கிறார்கள். நாம் எவ்வளவு வளர்ந்தாலும் அந்த உணர்வு அப்படியே இருக்கும். அவர்கள் விரும்பியபடி அவர்களை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருப்பது மட்டும்தான் நம்முடைய குறிக்கோள். ஒவ்வொரு முறையும் நாம் அவர்களை மகிழ்ச்சியாக சிறப்பாக உணர வைக்கும் போது வாழ்க்கை அழகாக இருக்கும். இனிய பிறந்தநாள் குமாரி அம்மா . நீ இல்லாமல் நான் இவ்வளவு தூரம் வந்திருக்க மாட்டேன். லவ் யூ அம்மா, பல வருடங்கள் உங்கள் பிறந்தநாளை இதே சிரிப்புடன் அமைதியுடன் கொண்டாட வேண்டும்" என்று பதிவிட்டிருக்கின்றார்.

விக்னேஷ் சிவன், பிரதிப் ரங்கநாதனை வைத்து 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' என்ற திரைப்படத்தை இயக்கி வருகிறார்.

# ஆலியா பட், ரன்வீர் சிங் குறித்து இயக்குனர் கரண் ஜோகரின் இன்ஸ்டா பதிவு





பாலிவுட் சினிமாவின் பிரபல இயக்குனர் கரண் ஜோகர். இவர் தயாரிப்பாளர், திரைக்கதை ஆசிரியர், தொலைக்காட்சி தொகுப்பாளர், என பன்முகத் திறன் கொண்டவர். பாலிவுட் திரையுலகில் தற்போது உச்ச நட்சத்திரமாக இருக்கும் பல பிரபலங்கள் இவர் திரைப்படத்தின் மூலம் வெள்ளித்திரையில் அறிமுகமானவர்கள். இவர் 'காபி வித் கரண்' என்ற பிரபல நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் இவர் இயக்கிய 'ராக்கி அவுர் ராணி கி பிரேம் கஹானி' திரைப்படம் வெளியாகி ஒரு வருடம் ஆகிறது. இந்தப்படத்தில் நடிகை ஆலியா பட் மற்றும் ரன்வீர் சிங் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படம் வெளியாகி ஒரு வருடம் ஆன நிலையில், இது குறித்த பதிவு ஒன்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில் " நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்! இந்தப்படம் இந்தி சினிமாவின் கொண்டாட்டமாக இருந்தது, இந்தப்படத்தில் நடித்ததற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன்! படத்தில் நடித்த ஆலியா பட் மற்றும் ரன்வீர் சிங் இருவரும் என் வாழ்க்கையையும் வேலையையும் மிகவும் எளிதாக்கினார்கள், நான் உங்கள் இருவரையும் நேசிக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், படத்தில் மாமியாராக நடித்த ஜெயா பச்சனுக்கு நன்றி தெரிவித்தார். ஷபானா ஆஸ்மி மற்றும் தர்மேந்திரா ஆகியோருக்கும் நன்றி தெரிவித்தார், மேலும், "படத்தின் இதயமாகவும் ஆன்மாவாகவும் இருக்கும் தனது குழுவினர் இல்லாமல் நாங்கள் இருந்திருக்கவே மாட்டோம்" என இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# ரியோ ராஜ் நடிக்கும் யுவனின் ஸ்வீட்ஹார்ட் புரோமோ வீடியோ




யுவன் ஷங்கர் ராஜா இசைக்கு உலகம் முழுவதும் பல ரசிகர்கள் உள்ளனர். தற்பொழுது விஜய் நடித்துள்ள 'கோட்' திரைப்படத்திற்கு இசையமைத்துள்ளார். இசையமைப்பது மட்டுமல்லாமல் அவர் படங்களை தயாரித்தும் வருகிறார்.ஹரிஷ் கல்யாண் நடித்த 'பியார் பிரேமா காதல்' மற்றும் 'ஹை ஆன் லவ்' என்ற படங்களை தயாரித்துள்ளார். இந்த இரண்டு படமே மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. அதைத்தொடர்ந்து சீனுராமசாமி இயக்கத்தில் விஜய் சேதுபதி இயக்கத்தில் 'மாமனிதன்' திரைப்படத்தை தயாரித்தார். இத்திரைப்படம் வெளியான சில நாட்களிலேயே பல சர்வதேச விருதுகளை குவித்தது.

தற்பொழுது யுவனின் YSR பிலிம்ஸ் நிறுவனம் அவர்களது 4 வது திரைப்படத்தை தயாரிக்கவுள்ளனர். இப்படத்தின் பெயர் அறிவிப்பு வீடியோ தற்போது வெளியாகியுள்ளது. இப்படத்தில் ரியோ ராஜ் மற்றும் கோபிகா ரமேஷ் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளனர். படத்தில் இவர்களுடன் ரெடின் கிங்ஸ்லி , ரெஞ்சி பானிக்கர் , அருணாச்சலம்பா,துளசி,சுரேஷ்சக்கரவர்த்தி நடிக்கவுள்ளனர்.





இப்படத்தை அறிமுக இயக்குனரான ஸ்வினீத் எஸ் சுகுமார் இயக்கவுள்ளார்.

படத்தின் பெயர் அறிவிப்பு புரோமோ வீடியோ மிகவும் நகைச்சுவை பாணியில் இருக்கின்றது. யுவன்இப்படத்தைதயாரித்து படத்திற்கு இசை அமைக்க உள்ளார். படத்திற்கு 'ஸ்வீட்ஹார்ட்' என்று பெயரிட்டுள்ளனர்.இந்தபுரோமோவீடியோ காட்சிகள் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

# மகளிர் ஆசிய கோப்பை: முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணி



9வது பெண்கள் ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி(20ஓவர்)இலங்கையின்தம்புல்லாவில் நடந்து வருகிறது. 8 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் லீக் மற்றும் அரைஇறுதி முடிவில் இந்தியாவும், இலங்கையும் தோல்வியே சந்திக்காமல் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இறுதிப்போட்டி இன்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஷெபாலி வர்மா மற்றும் ஸ்மிரிதி களமிறங்கினர்.


இதில் ஷெபாலி வர்மா 16 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த உமா சேத்ரி 9 ரன்களில் அவுட் ஆகி வெளியேறினார். கேப்டன்ஹர்மன்பிரீத்கவுர் 11 ரன்களில் கேட்ச் ஆனார். மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய ஸ்மிரிதி மந்தனா, 36 பந்துகளில் அரைசதம் கடந்தார். ஜெமீமா ரோட்ரிக்வெஸ் 29 ரன்களில் ரன் அவுட் ஆனார்.

இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 165 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 166 ரன்கள் என்ற இலக்கை நோக்கி இலங்கை அணி விளையாடியது. அந்த அணியின் தொடக்க வீராங்கனையாக களமிறங்கிய விஷ்மி குணரத்னே, 1 ரன் மட்டுமே எடுத்த நிலையில், ரன் அவுட் ஆகி வெளியேறினார்.

அடுத்து வந்த ஹர்ஷிதாவுடன், சமாரி அத்தபத்து ஜோடி சேர்ந்தார். நிலைத்து நின்று ஆடிய இந்த ஜோடி, இந்திய வீராங்கனைகளின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தனர். இருவரும் அரைசதம் கடந்த நிலையில், சமாரி அத்தபத்து 61 ரன்களில் தீப்தி சர்மா வீசிய பந்தில் போல்ட் ஆனார்.

மறுபுறம் அதிரடி காட்டிய ஹர்ஷிதா, 51 பந்துகளில் 69 ரன்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இறுதியில் இலங்கை அணி 18.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 167 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் இலங்கை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி முதல் முறையாக மகளிர் ஆசிய கோப்பை கிரிக்கெட் சாம்பியன் பட்டத்தை வென்றது.

# பாரீஸ் ஒலிம்பிக்: டேபிள் டென்னிஸ் முதல் சுற்றில் மணிகா பத்ரா வெற்றி



33வது ஒலிம்பிக் விளையாட்டு திருவிழா பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நேற்று முன்தினம் இரவு கோலாகலமாக தொடங்கியது. இதில் 206 நாடுகளைச் சேர்ந்த 10,500க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், டேபிள் டென்னிஸ் பிரிவின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மணிகா பத்ரா, கிரேட் பிரிட்டனின் அன்னா ஹர்சியுடன் மோதினார். இதில் மணிகா பத்ரா 41 (118, 1210, 119, 911, 115 ) என்ற புள்ளிக் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

முன்னதாக பேட்மிண்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து முதல் சுற்றில் வென்றார். பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் தகுதிச்சுற்றில் இந்தியாவின் ரமிதா ஜிண்டால் வென்றார். துப்பாக்கி சுடுதல் 10 மீ ஏர் ரைபிள் இறுதிச்சுற்றில் இந்திய வீராங்கனை மானு பாக்கர் வெண்கலம் வென்று அசத்தினார்.

# 2வது டி20 கிரிக்கெட்: டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சு தேர்வு



இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி, மூன்று டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது. அதில் இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் டி20 தொடர் நடைபெற்று வருகிறது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டி20 கிரிக்கெட் போட்டி பல்லகெலேவில் நேற்று நடைபெற்றது. இதில் இந்திய அணி 43 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் இந்தியா 10 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதைத் தொடர்ந்து இந்த இரு அணிகள் இடையிலான 2வது டி20 கிரிக்கெட் போட்டி இன்று நடக்கிறது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ், பந்துவீச்சை தேர்வு செய்தார். இதன்படி இலங்கை அணி முதலில் பேட்டிங் செய்ய உள்ளது.

# சேப்பாக் அணிக்கு எதிரான ஆட்டத்தில் மதுரை பாந்தர்ஸ் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி



8 அணிகள் இடையிலான 8வது டி.என்.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் தொடர் திண்டுக்கல்லை அடுத்த நத்தத்தில் நடந்து வருகிறது. இன்றுடன் லீக் சுற்று ஆட்டங்கள் முடிவடைகிறது. அதன்படி இன்று நடைபெற்ற ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணியுடன் மதுரை பாந்தர்ஸ் அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற சேப்பாக் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து மதுரை அணியின்தொடக்கஆட்டக்காரர்களாககளமிறங்கிய சுரேஷ் லோகேஷ்வர் மற்றும் கேப்டன் ஹரி நிஷாந்த், அந்த அணிக்கு நல்ல தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தனர்.

இதில் அரைசதம் விளாசி அதிரடி காட்டிய சுரேஷ் லோகேஷ்வர், 55 ரன்களில் கேட்ச் ஆனார். ஹரி நிஷாந்த் 37 ரன்களில் ஆட்டமிழந்தார். சரவணன் 25 ரன்களில் கேட்ச் ஆகி வெளியேறினார். மறுபுறம் அதிரடி காட்டிய ஜெகதீசன் கவுசிக், 24 பந்துகளில் 43 ரன்கள் விளாசி இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இறுதியில் மதுரை அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 191 ரன்கள் குவித்தது. சேப்பாக் அணியில் அபிஷேக் தன்வர், பாபா அபராஜித், சிலம்பரசன், அஸ்வின் கிறிஸ்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இதைத் தொடர்ந்து 192 ரன்கள் என்ற இலக்கை நோக்கி சேப்பாக் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக சந்தோஷ் குமார் மற்றும் ஜெகதீசன் களமிறங்கினர். இதில் ஜெகதீசன் 10 ரன்களில் கேட்ச் ஆனார். கேப்டன் பாபா அபராஜித் 17 ரன்களில் விக்கெட்டை இழந்தார். மறுமுனையில் சந்தோஷ் குமார், 36 பந்துகளில் 48 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

அதிரடியாக விளையாடிய பிரதோஷ் ரஞ்சன் பவுல், 34 பந்துகளில் அரைசதம் கடந்தார். இறுதியில் சேப்பாக் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 182 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் மதுரை பாந்தர்ஸ் அணி 9 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து

விளக்கம்:
வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.